# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 12.05.2026**

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 4947/F/2025**

திரு.ஜி.சங்கர், -- புகார்தாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
திட்ட உதவியாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
திருவண்ணாமலை மாவட்டம்-606 601.

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.ஜி.சங்கர், அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், திரு.ம.சிவக்குமார், மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-II, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம், வேங்கிக்கால் கிராமம், திருவண்ணாமலை மாவட்டம்-606 604 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 06.09.2025 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், "The construction and renovation work of the Sri Mariyamman Temple mentioned in the above image is ongoing. Please share information under Section 2-J certified copy about permission prior approval (or) no objection certificate granted by the relevant jurisdiction General Development control regulation (GDCR) Department before this construction work can take place" என்ற தகவலை வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்பேடு, சென்னை-107 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர்/ கட்டடக்கலை/ திட்ட உதவியாளர், நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், கோயம்பேடு, சென்னை-107 அவர்கள் ந.க.எண்.20221/2025/RTI-2/TCP-8, நாள் 12.09.2025 தேதியிட்ட கடிதத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3)-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்காத காரணத்தால் 25.10.2025 தேதியிட்டு பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். இப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து கோப்பு எண்.2656/2024/தி.மலை, நாள் 01.04.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் நேரடியாக வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனை மனுதாரரும் பெற்றுக்கொண்ட ஒப்புகை கடிதத்தின் நகலையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கு தொடர்பான தகவல்கள் இல்லை என்றும், தவறான தகவல்கள் என்று ஆணையம் பதிவு, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- **மனுதாரரின் 06.09.2025 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுவானது பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றப்பட்டும் உரிய காலத்திற்குள் (30 தினங்களுக்குள்) தகவல்களை வழங்காததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.K.பக்ருதிகான், மேற்பார்வையாளர்/ வரைநிலை-2, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், முதன்மைக்கல்வி அலுவலகம் அருகில், வேங்கிக்கால் கிராமம், திருவண்ணாமலை மாவட்டம் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

- **மேலும் இன்றைய விசாரணைக்கு ஆஜரான தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன் மனுதாரரின் வேறொரு வழக்கு தொடர்பான தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டு ஒப்புதல் தெரிவித்த கடிதத்தின் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்த தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.ம.சிவகுமார், மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-II, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம், முதன்மைக் கல்வி அலுவலகம் அருகில், வேங்கிக்கால் கிராமம், திருவண்ணாமலை மாவட்டம்-606 604 அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) மற்றும் 20(2)-ன் கீழ்**

**நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4947/F/2025</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
திட்ட உதவியாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவண்ணாமலை மாவட்டம்-606 601.

**தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்**
**திரு.ம.சிவகுமார்,**
**மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-II,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம்,**
**முதன்மைக் கல்வி அலுவலகம் அருகில்,**
**வேங்கிக்கால் கிராமம்,**
**திருவண்ணாமலை மாவட்டம்-606 604.**

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்**
**திரு.K.பக்ருதிகான்,**
**மேற்பார்வையாளர்/ வரைநிலை-2,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**முதன்மைக்கல்வி அலுவலகம் அருகில்,**
**வேங்கிக்கால் கிராமம்,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**

*(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)*

<u>புகார்தாரர்</u>

திரு.ஜி.சங்கர்,
எண்.82/16F2, செங்கம் ரோடு
5வது தெரு,
திருவண்ணாமலை மாவட்டம்-606 603.

<u>**நகல்**</u>

இயக்குநர்,
நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநர் அலுவலகம்,
2வது, 3வது மற்றும் 4வது தளம்,
E&C மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை-600 107.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For follow up)

Copy to: File NS/PA-